மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டப் பணியில் 23 இலட்சம் ரூபாய் செலவில் 34 கடைகளும், சிற்றுண்டிச்சாலையும் கட்டப்பட உள்ளன. அதேபோல் மூன்றாவது கட்டப் பணியில் 26 பேருந்துகள் நிற்கும் இடங்களும், கட்டணக் கழிப்பறை ஒன்றும், நான்காவது கட்டப் பணியில் 17 பேருந்துகள் நிற்கும் இடங்களும், நகரப் பேருந்துகளுக்கான மேடையும் அமைக்கப்பட உள்ளன. ஆகவே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற குறைகள் அநேகமாக தீர்க்கப்பட்டு விடும்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்படுகிற இந்தப் பேருந்து நிலையம் எப்போது துவக்கபபட்டது ? இதை விரைவில் முடிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது துவக்கப்பட்டது என்பது பிரச்சினை அல்ல. அது முடிவுற்றுக்கொண்டிருக்கிறது. விரைவில் முடிந்துவிடும் என்று முதல் பதிலிலேயே நான் தெரிவித்து இருக்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வீடுகட்டும் திட்டம்.

89—(* வினா எண் 9144) திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு என ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு அரசு நிர்ணயம் செய்துள்ள குறியீடு எவ்வளவு ?

(ஆ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் குறியீடு கணக்கிடப்படுகிறதா அல்லது மாவட்ட அளவில் கணக்கிடப் படுகிறதா ?

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆதி திராவிடர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 1986—87 ஆம் ஆண்டிற்கு, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் குறியீடு 25,504 வீடுகள், 1987—88ஆம் ஆண்டிற்குக் குறியீடு

1987 நவம்பர் 13]

25,000 வீடுகள் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் குறியீடு 1986–87ஆம் ஆண்டிற்கு 25,313 வீடுகள், 1987–88ஆம் ஆண்டிற்குக் குறியீடு 22,618 வீடுகள்.

(ஆ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் குறியீடு நிர்ணயிக்கப்படுவதில்லை. மாவட்ட அளவில் மட்டும் கணக்கிடப்படுகிறது. ஆனால், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும், குறியீடு கணக்கிடப்படுகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக ஆதி திராவிட மக்களுக்குக் கட்டித் தரப்படுகின்ற அந்த வீடுகள் 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மட்டுமே இதுவரையில் கட்டித்தரப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு ஆண்டில் 7, 8 மாதங்கள் தண்ணீர் சூழ்ந்த பகுதிகளாக உள்ளன. காவேரி, வெண்ணாறு பகுதிகளில் இருக்கிற தாழ்வான பகுதிகளில் 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகிற வீடுகள் சில நேரங்களில் தண்ணீரால் மூழ்குகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதற்குரிய திட்ட மதிப்பீட்டை, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மட்டுமாவது கொஞ்சம் உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசும், மாநில அரசும் இரண்டும் சேர்ந்து நிறைவேற்றுகிற திட்டம். ஒரு திட்டம் மத்திய அரசு தன்னுடைய பொறுப்பிலே செலவிட்டு நிறைவேற்றுகிற திட்டம். ஆகவே, இதற்கான முடிவுகளை எடுக்கிறபோது மத்திய அரசோடு சேர்ந்து விவாதித்துதான் முடிவு எடுக்க முடியும். இதைப்பற்றி நேரம் வருகிறபோது மாநிலம் முழுமைக்கும்தான் இப்படிப்பட்ட திட்டங்களுக்கான முடிவுகள் எடுக்கப்பட முடியுமே தவிர தனியாக ஒரு மாவட்டத்திற்கு என்று எடுப்பது சிரமமாக இருக்கும். ஏன் என்றால் இப்போதே மலைப் பகுதிகளில் அதிகமாக செலவு ஆகும் இடங்களில் 30 சதவீதம் இதிலேயிருந்து அதிகச் செலவு செய்யலாம் என்று ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை, தக்கசமயத்தில்—பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுகின்ற நேரத்தில்—சேர்த்து பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS